7. திருமதி லில்லி தாமஸ், இளைய மகளிர் கிருத்தவ அமைப்பு.

8. திருமதி மந்தா கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.சி.

9. திருமதி பங்கஜாட்சி சுப்பையன்.

10. திருமதி பவானி பழனியம்மாள்.

11. திருமதி சரஸ்வதி நாராயணசாமி.

12. திருமதி கஸ்தூரி பாலன்.

13. திருமதி ஜீன் அகஸ்டின்.

திரு. டி. சந்தோஷம்: பெண்களின் முன்னேற்றத்திற்காக திட்டம் வகுப்பது நல்லதுதான். ஆனால் அதே சமயத்தில் குடும்பங்களில் பெண்களின் சர்வாதிகாரத்திலிருந்து ஆண்களைப் பாதுகாக்க அரசு திட்டம் வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: துணைத் தலைவர் அவர்களே, அவர் அவர்களாகவே வகுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

THIRU A. R. DAMODARAN: Sir, in the Legislative Council we have only three ladies, one nominated and two elected. The Hon. Minister also is here. In view of the fact that we are 63 Members, do the Government have any proposal to increase the Membership of this Council for women at last by two or three to give adequate representation to the fair sex, Sir?

THE HON. SELVI P. T. SARASWATHI: Sir, I am afraid I cannot answer this question.

THIRU G. SWAMINATHAN: May I know who can answer this?

(No reply.)

Sri Lanka Repatriates.

* 140 Q.—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Handlooms and Textiles be pleased to state—

(a) whether Sri Lanka repatriates have been employed in Spinning Mills in Ramanathapuram district during the year 1977;

(b) if so, the number of persons employed and the names of the towns in which the Mills are situated; and

(c) the concessions given to them on behalf of the Government?

இலங்கை அகதிகள்.

* திரு. ஆற்காடு நா. வீராசாமி: (திரு. வே தங்க பாண்டியன் சார்பில்) மாண்புமிகு கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977 ஆம் ஆண்டில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நூற்பு ஆலைகளில், இலங்கை அகதிகள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், எந்த ஊர் நூற்பு ஆலைகளில் எத்தனை பேர் அமர்த்தப் பட்டுள்ளார்கள் ?

(உ) அவர்களுக்கு அரசின் சார்பில் அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இராமநாதபுரம் மாவட்டத் தில் கூட்டுறவுத் துறையில் ஸ்ரீவில்லிபுத்தூரில் மட்டும் ஒரு நூற்பாலை உள்ளது. அதில் 1977 ஆம் ஆண்டில் இதுவரை அகதிகள் வேலையில் அமர்த்தப்படவில்லை.

(இ) எழவில்லை.

(உ) அரசின் சார்பில் ஆலைகளில் பணியாற்றும் அகதிகளுக்கு அளிக்கப் படும் சலுகைகள் :—

(1) ஆலையில் வேலையில் சேர்ந்த முதல் 6 மாத காலத்திற்கு உதவிப் பணமாகக் குடும்பத்திலுள்ள அங்கத்தினர்களைப் பொறுத்து அளிக்கப் படுகிறது.

(2) அகதிகள் ஆலையில் வேலையில் சேர்ந்தவுடன் குடிசை போட்டுக் கொள்வதற்காக மானியமாக ரூ. 250 அளிக்கப்படுகிறது.

(3) ஆலைகளில் மின்சாரவெட்டு காரணத்தால் தற்காலிக வேலை இல்லாமல்போகும் [Lay Off] அகதிகளுக்கு அரசினரால் நிர்ணயிக்கப் பட்ட பராமரிப்புச் செலவு (Maintenance Allowance) தொகை அளிக்கப்படுகிறது.

திரு. க. அறிவழகன் : இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இந்த நூற் பாலையில் உண்மையில் இதற்கு முன்னால் அகதிகள் வேலைக்கு அமர்த்தப் பட்டார்களா ? அல்லது இனியாவது அமர்த்தப்படுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1978 பிப்ரவரி 25]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையில், 1971 ஆம் ஆண்டு, ஆலைகள் விரிவாக்கும் திட்டத்தின் கீழ் 200 அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க, இந்திய அரசால் 15 இலட்சம் ரூபாய் மாநில அரசுக்குக் கடனாக வழங்கப் பட்டது. இந்தத் தொகை அந்த ஆலையின் பங்குத் தொகையாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டுக்குள்ளாக இருநூற்றுக்கும் மேலாகவே, அதாவது கிட்டத்தட்ட 289 அகதிகளுக்கு நாம் வேலை வாய்ப்பைக் கொடுத்திருக்கிறோம்.

மேலும் ஏதாவது வேலை வாய்ப்புக் கொடுக்கப்படுமா என்று கேட்டிருக் கிறார்கள். 289 அகதிகளில் 128 அகதிகள் அவர்களது சொந்த விருப்பத்தின் பேரில் அவ்வப்போது வேலையை விட்டுச் சென்றிருக்கிறார்கள். எனவே இப்போதுள்ள நிலையில் அந்த 200 அகதிகளை வேலையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டியிருப்பதால், கிட்டத்தட்ட 80 அல்லது 90 இடங்களில் இப்போது அகதிகளை நியமிக்க வேண்டுமென்று முடிவு செய்து, அதிலே குறிப்பாக மத்திய அரசிடம் ரூ. 10 லட்சம் கடனாகக் கோரியிருந்தோம். அதையும் அவர்கள் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், கழிவுப் பருத்தியிலிருந்து துணி உற்பத்தி செய்யும் ஆலையில் 90 அகதிகளுக்கு வேலை கொடுக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்த ஆரம்பித்திருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(1) அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதைப் பற்றியும் அவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைத்திருப்பதைப் பற்றியும் இம்மன்றத்தில் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசியபோது அவை முன்னவர் அவர்கள் அதற்கான விளக்கம் அளிக்கும்போது